


# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

**மானியக் கோரிக்கை எண்: 37**

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை**



## அறிவிப்புகள் 2024-2025

## சு.முத்துசாமி

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்**

## 1. கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ள மதுபான விற்பனையில் ஈடுபட்டு, சிறைத்தண்டனை பெற்று விடுதலையாகி மனம் திருந்தியவர்களுக்கு மறுவாழ்வு நிதி வழங்குதல்.

தமிழ்நாட்டில் கள்ளச்சாராயத்தை முற்றிலுமாக ஒழிக்கவும், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கள்ளத்தனமாக அயல்நாட்டு மதுபானங்கள், தெளிந்த சாராவி ஆகியவற்றை கடத்துதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு, சிறைத்தண்டனை பெற்று விடுதலையாகி மனம் திருந்தியவர்கள் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் தடுக்க அவர்களுக்கு மறுவாழ்வு வழங்க வேண்டும். அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, அவர்களை சுயதொழில்களில் ஈடுபடுத்தி அதன்மூலம் இவர்களின் சமூக பொருளாதார நிலை மற்றும் வாழ்வாதாரத்தை உயர்த்த, நபர் ஒருவருக்கு ரூ.50,000/- மானியமாக வழங்குவதற்கு ஏதுவாக ரூ.5.00 கோடி மறுவாழ்வு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய துறைகளுடன் இணைந்து அவர்களுக்கான திறன் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்படும்.

## 2. கள்ளச்சாராயம், போலி மதுபானங்கள் மற்றும் போதைப் பொருட்களுக்கு எதிராக தீவிரமான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்துதல்.

தமிழ்நாட்டில் கள்ளச்சாராயம் அருந்துதல் மற்றும் போதைப் பொருட்கள் உட்கொள்வதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்கள் மற்றும் இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வருவாய்த் துறை, காவல் துறை, போக்குவரத்துத் துறை, பள்ளிக் கல்வித் துறை மற்றும் உயர்கல்வித் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து மாவட்டந்தோறும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கு ரூபாய் 5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



## 3. மாநிலம் முழுவதும் உள்ள 45 மதுவிலக்கு சோதனைச் சாவடிகளில் வாகன பதிவெண் அடையாளம் காணும் தானியங்கி கண்காணிப்பு கேமராக்களை (ANPR) நிறுவுதல்.

கள்ளச்சாராயம், எரிசாராயம், பிற மாநில மதுபானங்கள் மற்றும் போதைப் பொருட்கள் ஆகியவற்றின் கடத்தலைத் தடுத்திடவும், தீவிர கண்காணிப்பினை மேற்கொள்ளவும், மாநிலம் முழுவதுமுள்ள 45 மதுவிலக்கு சோதனைச் சாவடிகளில் வாகன பதிவெண் அடையாளம் காணும் தானியங்கி கண்காணிப்பு கேமராக்கள் (Automatic Number Plate Recognition Cameras) நிறுவவும், அவற்றின் செயல்பாட்டினை சென்னையிலுள்ள மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் தலைமையகத்திலிருந்து கண்காணிக்கும் வகையில் கண்காணிப்பு மையம் அமைக்கவும் ரூபாய் 5.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 4. அமலாக்கப் பணியகம் – குற்றப் புலனாய்வுத் துறையின் கீழ் இயங்கும் மத்திய நுண்ணறிவுப் பிரிவில் பணிபுரியும் காவல் அலுவலர்களுக்கு தொழில்நுட்பக் கருவிகள் வழங்குதல்.

அமலாக்கப் பணியகம் - குற்றப் புலனாய்வுத் துறையின் கீழ் இயங்கும் மத்திய நுண்ணறிவுப் பிரிவில் பணிபுரியும் காவல் அலுவலர்கள் நுண்ணறிவு அறிக்கைகளை மந்தனமாக தயார் செய்ய வேண்டியுள்ளதால் அவர்களுக்கு மடிக்கணினி, இணைய இணைப்பு அட்டை மற்றும் தொழில்நுட்பக் கருவிகள் ரூபாய் 18.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**சு.முத்துசாமி**
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்